

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 2.6.2023 அன்று முகாம் அலுவலகத்தில், மாநில திட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டதையொட்டி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன் உள்ளார்.

உரிய அனுமதி - பாதுகாப்பு உபகரணங்களின்றி - விதிகளை மீறி தூய்மைப் பணியாளர்களை

# கழிவு நீரகற்றும் பணியில் ஈடுபடுத்துவோர் மீது கடும் நடவடிக்கை!

## நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு எச்சரிக்கை!

சென்னை, ஜுன் 5 -

உரிய அனுமதி மற்றும் பாதுகாப்பு உபகரணங்களின்றி விதிகளை மீறி கழிவு நீரகற்றும் பணிகளில் தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தும் உரிமையாளர், ஒப்பந்ததாரர், பணி அமர்த்துபவர் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை அயனாவரத்தில் உள்ள சென்னை குடிநீர் வாரிய பயிற்சி மையத்தில் கழிவு நீரகற்றும் பணிகளை இயந்திரங்களைக் கொண்டு பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளுதல் குறித்த பயிற்சியினைத் தொடங்கி வைத்து நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 22.05.2023 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் போது ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.

மேலும், இது தொடர்பாக, முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் 28.2.2023 அன்று (DICCI) அமைப்புடன் இணைந்து சென்னைக் குடிநீர் வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் தூய்மைப் பணியில் ஈடுபடுவோர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் பொருட்டு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

அதனடிப்படையில், கழிவு நீரகற்றும் வாகன உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், உதவியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதற்கட்டமாக கழிவு நீரகற்றும் பணிகளை இயந்திரங்களை கொண்டு பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான பயிற்சிகள் சென்னை, கோவை, மதுரை மற்றும் மறைமலைநகர் ஆகிய இடங்களில் அளிக்கப்படும். மேலும், சென்னைப் பெருநகரப் பகுதியில் நவீன இயந்திரங்களையும் கருவிகளையும் பயன்படுத்தி தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோர்களாக மாற்றி கழிவு நீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும்போது ஏற்படும் உயிரிழப்புகளை தவிர்க்கும் பொருட்டு முறையான வழிகாட்டு நெறிமுறைகள் தயாரிக்கப்பட்டு வருகிறது. தூய்மைப் பணிகளில் ஈடுபடுவோர் மற்றும் தூய்மைப் பணியாளர்களை பணி அமர்த்துவோர் என்னென்ன பாதுகாப்பு நடடிவக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இப்பயிற்சியில் முழுமையாக தெரிவிக்கப்படும். தூய்மைப் பணிகளில் ஈடுபடுவோர் எக்காரணம் கொண்டும் கழிவுநீர் தொட்டிகளில் இறங்கி பணிகள் மேற்கொள்ளக்கூடாது. இது தொடர்பான விழிப்புணர்வு பணிகள் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் அரசின் அனுமதி பெற்றப் பின்னரே பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை தவறாமல் அனைவரும் பின்பற்ற வேண்டும். 2.1.2023 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண்.1ன்படி அனைத்து கழிவுநீர் அகற்று லாரிகளும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து உரிமம் பெறவேண்டும்.



உரிமத்தில் குறிப்பிட்டுள்ள கழிவுநீர் உந்து நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் மட்டுமே மலக்கசடு மற்றும் கழிவுநீர் அகற்றப்பட வேண்டும். அனைத்து கழிவு நீரகற்றும் லாரிகளிலும் GPS கருவிகள் பொருத்தப்பட்டு லாரிகளின் இயங்கங்கள் கண்காணிக்கப்படும். 15.6.2023 முதல் பெருநகர சென்னை மாநகரப் பகுதிகளிலும், 30.6.2023 முதல் பிற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் பொதுமக்கள் 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு அரசின் உரிமம் அனுமதி பெற்ற வாகனங்களுக்கு உரிய கட்டணங்களை செலுத்தி கழிவுநீர் அகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

கழிவுநீர் அகற்றும் லாரிகளின் பராமரிப்பு மற்றும் லாரிகளில் வைத்திருக்க வேண்டிய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் இப்பயிற்சியில் விளக்கங்கள் அளிக்கப்படும். 7.6.2022 நாளிட்ட அரசாணை எண்.83ன்படி உரிய பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாமல், கழிவுநீர் கட்டமைப்பு மற்றும் கழிவுநீர் சேகரிப்பு தொட்டியில் பணி புரியும்போது உயிரிழப்பு ஏற்பட்டால், இப்பணியில் ஈடுபடுத்திய உரிமையாளரோ, ஒப்பந்ததாரரோ, பணி அமர்த்தியவரோ ரூ.15 இலட்சம் இழப்பீடாக இறந்த பணியாளரின் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும்.

பொதுமக்கள் தங்களது பொறுப்புகளை உணர்ந்து தங்களது வீடுகள், அலுவலகங்களில் உரிய அனுமதியைப் பெற்று பாதுகாப்பு உபகரணங்களைக் கொண்டு கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தனியார் மருத்துவமனைகள், அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் உரிய அனுமதியைப் பெற்று பாதுகாப்பு உபகரணங்களைக் கொண்டு மட்டுமே கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். சட்ட விதிகளுக்குப் புறம்பாக கழிவு நீரகற்றும் பணிகளை மேற்கொள்வோர் மீது உரிய சட்ட விதிகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சிறை தண்டனை அல்லது அபராத தொகை அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும். எனவே, அனைவரும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டார். கீழ்க்கண்ட கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், மின்னஞ்சல் மூலமாகவும் பொதுமக்கள் இது தொடர்பான விவரங்கள் பெறுவதோடு மட்டுமல்லாமல் கழிவு நீரகற்றல் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

கழிவு நீரகற்றும் பணிகள் தொடர்பாகவும், அரசின் விதிகளை மீறி கழிவு நீரகற்றும் பணிகள் மேற்கொண்டால் புகார்களை தெரிவிக்க-24 மணி நேரமும் செயல்படும் கட்டணமில்லா தொலைபேசி எண்-14420, மின் அஞ்சல் (சென்னை மாநகரப் பகுதி) grfocmwssb@gmail.com, மின் அஞ்சல் (பிற மாவட்ட பகுதிகள்) fsmhelpline@gmail.com.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்டுள்ளார்.

இப்பயிற்சி முகாமில் கழிவுநீர் லாரிகளை இயக்குபவர்களுக்கான சிறப்பு கையேட்டினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர், ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மரு.ஜெ. இராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் பா.பொன்னையா, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் ஷேக் அப்துல் ரஹ்மான் மற்றும் சென்னை குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் வி.கு.இராமசாமி, கண்காணிப்புப் பொறியாளர்கள், தனியார் லாரி உரிமையாளர்கள், ஒப்பந்ததாரர்கள், ஓட்டுநர்கள், உதவி யாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே. இராமச்சந்திரன்

### ஜுன் 5 (2021)



**தனது இளமைக் காலத்திலேயே கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**மன்னார்குடி நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**1989ல் மன்னார்குடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

---

விபத்து நடந்தவுடன் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் துரிதமாக செயல்பட்டார்!

# ஒடிசா ரெயில் விபத்து: வெளிப்படையான விசாரணை தேவை!

## கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா பேட்டி!

சென்னை, ஜூன் 5 -

ஒடிசா ரயில் விபத்தில் வெளிப்படையான விசாரணை இல்லாதது ஏன்? என்று தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் ஒடிசா ரயில் விபத்து குறித்து தி.மு.க. துணை பொதுசெயலாளர் ஆ.ராசா எம்.பி. செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

ஒடிசாவில் நடைபெற்ற மிகப்பெரிய ரெயில்வே விபத்தில் ஏறத்தாழ 290யையும் தாண்டி இறப்பு எண்ணிக்கை அதிர்ச்சியளிக்கிறது. மாலை 7 மணி அளவில் நடந்த அந்த விபத்தை அறிந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், அடுத்து ஒரு மணி நேரத்திற்குள்ளாக தகவல் கிடைத்த உடனேயே அந்த மாநிலத்தின் முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களோடு தொடர்புகொண்டு தன்னுடைய ஆழ்ந்த துயரத்தையும், இறந்தவர்களுக்கு இரங்கலையும் தெரிவித்து தமிழ்நாடு அரசின் சார்பில் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்வதற்கு தயாராக இருப்பதை எடுத்துரைத்தார்.

அதற்குப் பிறகு, தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் ஆகியோர் கொண்ட உயர்மட்டக் குழுவை அனுப்பி வைத்தார். அக்குழு அங்கேயே 5 நாட்கள் தங்கி, நிவாரண உதவிகள் செய்வதற்கு அனுப்பி இருக்கிறார்.

அதேபோல விபத்து நடந்த இடத்தில் இருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த சென்னைக்கு வர வேண்டியவர்களை அழைத்து வருவதற்கு உரிய ஏற்பாடுகளை முதலமைச்சர் செய்திட உத்தரவிட்டுள்ளார்.

அதேபோல அங்கே புதியதாக கண்ட்ரோல் ரூம் மூலம் தொடர்பு கொள்வதற்கு தென் மண்டல ரெயில்வே கண்ட்ரோல் ரூமுடன் இணைந்து செயல்படுவதற்கு ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி இருக்கிறார்.

அதேபோல் ஹெல்ப்லைன் - உதவி எண்கள் வழங்கி இருக்கிறார். இறந்தவர் குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் வழங்க அறிவித்து இருக்கிறார். இத்தனை அறிவிப்புகளையும் செய்தவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

மேலும் இன்று (3.6.2023) காலை 8 மணி அளவில் தென்னக ரெயில்வேயின் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று ஒடிசா கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டு என்னென்ன பேரிடர் மேலாண்மை உதவி செய்ய வேண்டும் என்று கலந்துபேசி தகுந்த அறிவுரைகளை வழங்கி இருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நிகழ்த்தியிருக்கின்ற ஒரு விபத்தில் ஒரு மாநில முதலமைச்சர் மிக விரைவாக பணியாற்றி தமிழ்நாட்டு மக்களுக்காக மட்டுமல்ல, இந்த விபத்தில் சிக்கிய அனைவரும் காப்பாற்றப்பட வேண்டும். இறந்தவர்களுக்கு உரிய முறையில் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். அவர்களுடைய உடல்கள் உரிய இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும் உள்பட எல்லாப் பணிகளையும் தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்தப் பணிக்கு தொடர்புடைய அனைத்து நிறுவனங்களையும் தொடர்பிலே வைத்து எல்லாப் பணிகளையும் தமிழ்நாடு அரசு செய்துகொண்டிருக்கிறது.



ஒடிசா ரெயில் விபத்தால் ஒன்றிய அரசு ஸ்தம்பித்துள்ளது. ரெயில் விபத்தில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசுக்கு தெரியவில்லை. ரெயில்வேயில் பாதுகாப்பு அம்சங்கள் கேள்விக்குறியாக உள்ளன.

ரெயில் விபத்துக்கு யார் காரணம் என்பதை இதுவரை ஒன்றிய அரசு தெரிவிக்கவில்லை. ரெயில் விபத்துக்கு யார் காரணம் என்பதை உடனடியாக கண்டுபிடிக்க வேண்டும்.

ரெயில் விபத்து நிகழ்ந்த ஒரு மணி நேரத்திற்குள் தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒடிசா முதல் மந்திரியுடன் தொடர்பு கொண்டு பேசினார். தமிழகத்தில் இருந்து அமைச்சர்களை அங்கேயே 5 நாட்கள் தங்கி நிவாரண பணிகளை கவனிக்க உத்தரவிட்டுள்ளார்.

### விபத்துக்கான காரணத்தை தெளிவுபடுத்த வேண்டும்!

இந்த விபத்தினை வைத்து தி.மு.க. அரசியல் செய்ய விரும்பவில்லை. தொழில்நுட்ப கோளாறு காரணமாக விபத்து நடைபெற்றதா அல்லது ஊழியர்களின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டதா என்பதை தெளிவுப்படுத்த வேண்டும். விளம்பரத்தை மட்டுமே நம்பியும் வெறும் பிம்பத்தை வைத்து மட்டுமே டெல்லியில் ஆட்சி நடைபெற்று வருகிறது.

ரயிலில் பயணம் செய்த தமிழ்நாட்டை சேர்ந்த பயனாளிகளின் பட்டியலை எடுத்து அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களை கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரயில் விபத்தில் வெளிப்படையான விசாரணை இல்லாதது ஏன்? ஒன்றிய அரசு வாய் மூடி மௌனமாக இருப்பது ஏன்? இந்த அரசாங்கம் ஆடம்பரத்திற்கும் தேவையற்ற விளம்பரத்திற்கும் மக்களை திசை திருப்புவதற்கு மட்டுமே முக்கியத்துவம் செலுத்தி வருகிறது

“இதற்கு முன்னர் இருந்த காலத்தில் இருந்ததைவிட தற்போது தொழில்நுட்ப வளர்ச்சி அடைந்த காலத்தில் இந்த ரயில் விபத்து எப்படி ஏற்பட்டது? ரயில் விபத்துகள் ஏற்பட்டபோது, இந்திய வரலாற்றில் லால்பகதூர் சாஸ்திரி தொடங்கி லாலுபிரசாத், மம்தா பானர்ஜி உட்பட பலர் தார்மீக ரீதியாக பதவி விலகி உள்ளனர்.

### நவீன தொழில் நுட்பம் இல்லை!

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ரயில்வே அமைச்சரை அருகில் வைத்துக்கொண்டே, ‘ நாங்கள் ஆட்சியில் இருந்த போது விபத்துகளைத் தடுக்க தனி சிஸ்டம் (டிகாஸ்) கொண்டுவந்தோம். ஆனால், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த பாஜக அதனை ரத்து செய்துவிட்டு 'கவாச்' எனும் சிஸ்டத்தை கொண்டு வந்தார்கள். மொத்தம் 70 ஆயிரம் கி.மீ. ரயில்வே பாதை உள்ள இந்தியாவில் வெறும் 1500 கிலோமீட்டருக்குத்தான் இந்த ‘கவாச்’ சிஸ்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த இந்திய ரயில் பாதையில் இரண்டு சதவீதம் கூட இல்லை’ என குற்றம் சாட்டும் போது அங்கிருந்த ரயில்வே அமைச்சர் அமைதியாகத்தான் இருந்தார்.

தி.மு.கழகம் இந்த விஷயத்தில் அரசியல் செய்ய விரும்பவில்லை. ஆனால், இந்த விபத்துக்கு யார் காரணம்? தனி மனிதரா? சிஸ்டமா? இந்த விபத்து நடைபெறாமல் இருக்க நீங்கள் செய்த முன்னேற்பாடுகள் என்னென்ன? நாங்கள் கேட்பது இதுதான். இதற்கு யார் பொறுப்பு?

ஏற்கனவே இந்த விபத்தில் பலியானவர்கள் குடும்பத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலா ரூ.5 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளார்.

### அ.தி.மு.க. – பா.ஜ.க. வாய் திறக்காது ஏன்?

தமிழ்நாட்டில் ஏதாவது பிரச்சினைஏற்படும்போதுமுதலமைச்சர் ராஜினாமா செய்யவேண்டும், சம்பந்தப்பட்ட அமைச்சர் ராஜினாமா செய்யவேண்டும் எனக் கூறும் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க., ஒடிசா ரயில் விபத்து குறித்து ஏன் எதுவும் கூறாமல் உள்ளனர்?”

தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்நாடு முதல்வர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மிக துரிதமாகவும் முதன்மையாகவும் எடுத்து மற்றவர்களுக்கு முன்னுதார மாக திகழ்கிறார்.

விபத்து குறித்த விசாரணையை வெளிப்படை தன்மையுடன் செய்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி நாடாளுமன்றத்தில் இது குறித்து விவாதிக்க வேண்டும். விபத்தில் பலியான நபர்களின் குடும்பத்தாருக்கு தகுதியின் அடிப்படையில் ரயில்வே துறையில் வேலை பெற்று தருவதற்கான நடவடிக்கை தமிழ்நாடு அரசு எடுக்கும்.

இவ்வாறு துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா பேட்டியளித்தார்.

---

உ.மதிவாணன், எஸ்.கே.வேதரத்தினம், இல.மேகநாதன் பங்கேற்பு!

# திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லத்தில் 100 வது பிறந்த நாள் நிகழ்ச்சி!

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலைக்கு என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மரியாதை!

நாகை, ஜுன் 5 -

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் கலைஞர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க. ராஜேந்திரன், ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், எஸ்.பி.டி.சார்லஸ், கோ. சிவக்குமார், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா. குமார், சோ.பா.மலர்வண்ணன், தாமஸ்ஆல்வாஎடிசன், செல்வ.செங்குட்டுவன், கே.பழனியப்பன், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன். நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, வேளாங்கண்ணி பேரூர் கழகச் செயலாளர் மரிய சார்லஸ், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எஸ்.வி.டி.அருள், ப. உதயக்குமார், சத்திய மூர்த்தி, சாதிக், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் எஸ். செல்வா, எலக்ட்ரிகல் பாலா,

மாவட்டக் கழக பிரதிநிதி ஞானசேரகன், அசோக்குமார், டேனியல் சத்தியா ஒன்றியக் குழு தலைவர்கள் வாசுகிநாகராஜன், வே.அனுசியா, முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் பஞ்சுநாகராஜன், இளைஞர் அணி இல.மே.ஜெகன், திருக்குவளை கிளை கழகங்களின் நிர்வாகிகள் பி.தியாக ராஜன், எம்.ராமச்சந்திரன், தங்க.தியாகராஜன் பாஸ்கரன், கலைஞர் இல்ல பாதுகாப்பாளர் தியாகராஜன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதாஅருணகிரி மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழகத்தினர் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக கலைஞரின் தந்தை முத்துவேலர், தாய் அஞ்சுகம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் கலைஞர் இல்ல முகப்பில் ஒடிசா ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.